[11th February 1958

SRI A. R. SUBBIAH MUDALIAR : இங்கு அசெம்பளி நடக்கக்கூடிய காலங்களில் அசெம்பளி செக்ரடேரியட் சிப்பந்திகள் அதிக நேரம் வேலே பார்க்க வேண்டியதாக இருப்பதால் அவர்களுக்கு ஏதாகிலும் சலுகைகள் காண்பிக்க சர்க்கார் யோசிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: ஏற்கெனவே கேட்ட கேள்விக்கும் இப்பொழுது கேட்கப்படுகிற கேள்விக்கும் சம்பந்தம் இல்லே. இதைப்பற்றி தனிக் கேள்வி கேட்டால் அதிற்கு பதில் சொல்லப்படும்.

Rural Dispensaries

* 47 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the Government propose to run all the rural dispensaries themselves?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

SRI V. K. KOTHANDARAMAN : பல ரூரல் ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் இல்லே. பல ஆண்டுகளாக அப்படி டாக்டர்கள் இல்லாமல் பல ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. அதற்குக் காரணம் டாக்டர்களுக்கு போதுமான சம்பளம் கொடுக்கப்படாமல் இருப்பதுதான். அதனுல் டாக்டர்களுக்கு அதிகப்படியான சம்பளம் கொடுக்க சர்க்கார் முன் வருமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : சம்பளம் அதிகப்படியாகக் கொடுக்கப்படவேண்டுமென்ருல் அது நிதி மந்திரி அவர்களுடைய விஷயம். தாலுகா ஹெட்குவார்டர் ஆஸ்பத்திரிகளே யெல்லாம் இப்பொழுது சர்க்கார் எடுத்துக்கொண்டு நடத்தி வருகிறது. அது இன்னும் பூர்த்தியாகவில்லே. ரூரல் டிஸ்பென்சரிக்கு எல்லாம் மருந்து கொடுப்பது லோகல் போர்டின் வேலே. அவைகள்தான் அதற்கு ஜவாப்தாரி. டாக்டர்களுக்கு மாத்திரம்தான் சர்க்கார் சப்சிடி கொடுக்கிருர்கள். பிரைமரி சென்டர்களில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கு டாக்டர்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது.

SRI P. S. SANTHANAM : மருத்துவ விடுதிகளுக்கு டாக்டர்கள் வராத காரணம் என்னவென்ருல் அங்கே வரக்கூடிய டாக்டர் களுக்குத் தக்க வசதிகள் கிடையாது. குடியிருப்பதற்கு வீடுகள் கிடையாது. இந்தக் காரணங்களிஞல் அரசாங்கம் அங்கே டாக்டர்களே அனுப்பிஞலும் டாக்டர்கள் அங்கு செல்லமாட்டேன் என்று சொல்லி விடுகிருர்கள். அதனுல் டாக்டர்களுக்கு அங்கேயெல்லாம் குடியிருக்க வசதி செய்து கொடுப்பதோடு மற்ற இதர வசதிகளேயும் செய்து கொடுக்க சர்க்கார் முன் வருவார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : கூடுமான வரையில் பிரைமரி சென்டர்கள் இருக்கும் இடங்களில் அம்மாதிரி ஏதாகிலும் செய்யலாம் என்ற உத்தேசம் சர்க்காரிடம் இருந்துகொண்டிருக்கிறது.

SRI A. V. P. PERIYA GURUVALA REDDIAR : கிராமங் களில் இருக்கக்கூடிய ரூரல் டிஸ்பென்சரிகளுக்கு எம்.பி.பி.எஸ். படித்த டாக்டர்கள் வந்து வேலே பார்ப்பதற்கு ஒருவரும் சம்மதிப்பது இல்லே. ஆகையிஞல் கிராமங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளெல்லாம் மூடி கிடக்கின்றன. ஆகையிஞல். அதற்கு பதிலாக அங்கு ஆயுர்வேதம், ஹோமியோபதி படித்த டாக்டர்களேயாவது நியமிக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : ரூரல் டிஸ்பென்சரி இருக்கும் இடங்களில் எல்லாம் டாக்டர்களின் தொகை குறைவாக இருந்தால் அங்கே யெல்லாம் ஹோமியோபதி டாக்டர்களே நியமித்து அதன் மூலம் அதை சரி செய்ய முடியுமா என்பதையெல்லாம் பற்றிய ஒரு விதமான யோசனே இருந்துகொண்டிருக்கிறது.

11th February 1958]

Sri V. SANKARAN : எவ்வளவு குறைந்த வருவாய் கிடைப்பதாக இருந்தாலும் சரி, நகரத்தில் வாழும் வாழ்க்கைதான் நல்லது என்று நினைக்கும் நிலைமையில், கிராமத்தில் வேலை செய்வதற்கு போகும் டாக்டர்களுக்கு வழக்கமாகக் கொடுப்பதைவிட அதிகமாக 50 அல்லது 75 ரூபாய் கொடுத்தால், கிராமத்திற்குப்போய் வேலை செய்யக்கூடிய டாக்டர்கள் அதிகமாகக் கிடைப்பார்கள். அம்மாதிரி செய்ய சர்க்கார் முன் வருவார்களா?

The Hon. Sri M. A. MANICKAVELU : பிரைமரி ஹெல்த் சென்டர் டாக்டர்களுக்கு, தனி வைத்தியம் செய்வதற்காக ரூ. 50 கொடுத்து வந்ததை பகீரதப் பிரயத்தனத்தின் பேரில் ரூ. 100 ஆக்கினோம் அது வரைக்கும்தான் செய்ய முடிந்தது.

Bagyalakshmi Mill, Pollachi

* 48 Q.—Sri N. K. PALANISWAMI (on behalf of Sri P. S. Chinnadurai) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Bagyalakshmi Mill at Pollachi has been closed;

(b) if so, the reasons therefor; and

(c) the steps taken by the Government to give relief to the workers affected by the closure of the mill?

The Hon. Sri R. VENKATARAMAN : (a) & (b) Yes, Sir. The Pollachi Bagyalakshmi Mills, Pollachi, was closed on 3rd December 1957 due to financial difficulties.

(c) The workers have been advised to file claim petitions for payment of arrears of wages and lay-off compensation and retrenchment compensation.

Sri N. K. PALANISAMI : போதுமான முதலீடு இல்லாத காரணத்தால் அந்த மில் மூடப்பட்டிருக்கின்றது. ஆகையால் சர்க்காரே அதை எடுத்து நடத்துவதற்கான யோசனை இருக்கிறதா ?

The Hon. Sri R. VENKATARAMAN : நஷ்டம் அடைந்த மில்களையெல்லாம் சர்க்கார் நடத்துவது என்ற கொள்கையை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று நான் மீண்டும் மீண்டும் சொல்லியிருக்கிறேன். இந்த மில் ஏராளமாக நஷ்டம் அடைந்து விட்டது. இன்னும் சர்க்காருக்குக் கொடுக்கவேண்டிய விற்பனை வரியைக் கூட கொடுக்கவில்லை. ஆகையால், இதை நடத்த முடியவில்லை என்று அவர்கள் மூடிவிட்டார்கள்.

Sri A. R. MARIMUTHU : தொழிலாளர்களுக்கு வரவேண்டிய சம்பளப் பாக்கி அதிகமாக இருப்பதால், அந்தத் தொழிலாளர்களுக்குச் சர்க்கார் ஏதாவது உதவித் தொகை கொடுப்பதைப் பற்றி ஆலோசிக்குமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : சர்க்கார் இதற்கு உதவி கொடுக்க இயலாது.